கற்றல் தரம் : 3.5.6 (தமிழ்மொழி - ஆண்டு 5)
தொகுதி 13, பாடம் 3 (பக்கம் 102)
கருத்துகளில் காலியான இடத்தில் ஏற்ற சொற்களைத் தேர்வு செய்க.

உலகில் மனித உயிரினங்கள் தோன்றுவதற்கு முன்னரே ________________ தோன்றி விட்டன. பொதுவாகப் பூச்சியினங்கள் ________________ எதிரியே. வெட்டுக்கிளிகள் ________________ எனும் பிரிவைச் சேர்ந்தவை. வெட்டுக்கிளிகளில் பல இனங்கள் இருக்கின்றன. இயற்கையை ஒத்த பச்சை பழுப்பு நிறத்தில் ________________ வெட்டுக்கிளிகள் இருக்கும்.

வளர்ந்த வெட்டுக்கிளிகள் ______________ சேர்ந்து பயணிக்கும். பொதுவாக ஆசியா, வட ஆப்பிரிக்கா, ஐரோப்பாவில் வெட்டுக்கிளிகள் அதிகம் வாழ்வதாகக் கூறப்படுகிறது.

வெட்டுக்கிளிகளின் உடலில் கணுக்களாகப் பிரிக்கப்பட்ட மூன்று ____________________ உண்டு. அதன் பின் இணைக்கால்கள் மற்ற கால்களைவிட நன்கு வளர்ச்சி பெற்றவை. வெட்டுக்கிளிகள் பொருள்களைப் பிடிப்பதற்கு ____________________ பயன்படுத்துகின்றன.

இந்தப் பூச்சியினத்தின் ______________ அதன் அடிவயிற்றுக்குக் கீழேதான் இருக்கின்றன. வெட்டுக்கிளிகளுக்குப் பல நிறங்களின் வேறுபாடுகளும் நன்கு தெரியும். இந்த வெட்டுக்கிளிகள் எல்லாவிதமான ____________________ தின்றுவிடும். சில வகை வெட்டுக்கிளிகள் விவசாயத்தை அடியோடு அழித்துவிடும் திறன் கொண்டவை. எனவே, ____________________ வெட்டுக்கிளிகள் எதிரிகள் எனலாம்.

| | | | |
|---|---|---|---|
| இளம் | காதுகள் | கூட்டுச் | பூச்சியினங்கள் |
| விவசாயிகளுக்கு | இணைக்கால்கள் | மனிதனுக்கு | |
| கணுக்காலிகள் | தாவரங்களையும் | முன்னங்கால்களைப் | |

LIVEWORKSHEETS